

கழக மூத்த முன்னோடி மறைந்த மு.சுலைமான் அவர்களின் மூத்த மகனும்,கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸின் அண்ணன் அபு (ஏ) சையது அபுதாஹிர் மறைவையொட்டி அவரது இல்லத்திற்கு, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் அவரது தம்பி மு.சு.சித்திக் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொண்டார். கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக், கழக சொத்துப்பாதுகாப்புக் குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், டி.ஆர்.சண்முகசுந்தரம், மு.க.முத்து, கழக மாநில மாணவர் அணி தலைவர் இராஜீவ்காந்தி, பைந்தமிழ்பாரி, நாச்சிமுத்து, வீரகோபால், தமிழ்மறை, கல்பனாசெந்தில், பெரிய கடைவீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ.பதுருதீன், பொதுக்குழு உறுப்பினர் ச.கார்த்திகேயன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.அப்பாஸ், டவுன் பா. ஆனந்த், மாவட்டப் பிரதிநிதி எல்.என்.ரஹீம் , என்.ஜெ.முருகேசன், கோவை சுஜித், மாமன்ற உறுப்பினர்கள் முபஷூரா, தெய்வானை, கரும்புக்கடைசாதிக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

# திருவாரூர் - மன்னார்குடியில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், ஜன.22-

திருவாரூர் மாவட்டத்தில் ஜனவரி25 அன்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் நடைபெறும் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், திருவாரூர், மன்னார்குடி ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பொள்ளாச்சி உமாபதி ,மதுரை அலெக்சாண்டர், குடியாத்தம் புவியரசி, திருப்பூர் மனோகர் பாபு மற்றும் கழக இளம் பேச்சாளர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர். இந்த கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்து மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர்தம் அறிக்கையில் கூறியுள்ளதாவது.



“மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14ம் வயதில் புலிக்கொடி ஏந்தி திருவாரூர் வீதிகளில் தமிழ் மொழி காக்க புறப்பட்ட அந்த பயணம், இன்று உலக அரங்கில் தமிழ் மொழியை செம்மொழி அங்கீகாரம் பெரும் அளவுக்கு உயர்த்தியுள்ளது என்றால் அது மிகையில்லை. ஆனால் பாசிச சக்திகள் அன்று தமிழ் மொழியாம் தன்னிகரில்லா செம்மொழியை அழிக்க அன்று எடுத்த அதே ஆயுதமான இந்தி மொழியை தமிழ்நாட்டில் புகுத்தி ஏற்படுத்திய அதே முயற்சிகளை இன்றளவும் எடுத்து பின் வாசல் வழியாக இந்தி மொழியை திணிக்க முயற்சி செய்து வருகிறது.

உலக அரங்கமே வியந்து போற்றும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பொற்கால ஆட்சி நடத்தி இந்திய அளவில் முதன்மை மாநிலமாக தமிழ் நாட்டை வழி நடத்தும் நமது கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள், ஐம்பெரும் முழக்கத்தில் ஒன்றாம் இந்தித்திணிப்பை எந்நாளும் எதிர்ப்போம் எனும் தாரக மந்திரத்தை கொள்கை முழக்கமாக கொண்டு தமிழை காத்து தமிழ் இனத்தை காத்து வருகிறார்.

அதன்படி ஆண்டுதோறும் மொழிப்போர்த் தியாகிகளை போற்றும் விதமாக ஜனவரி25 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம், திருவாரூர் கீழ வீதி மற்றும் மன்னார்குடி பந்தலடி ஆகிய இடங்களில் 25.01.2025 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு எழுச்சியோடு நடைபெற இருக்கிறது. திருவாரூரில் நடைபெறும் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் பொள்ளாச்சி உமாபதி, குடியாத்தம் புவியரசி அவர்களும், மன்னார்குடி பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மதுரை அலெக்சாண்டர், மாநில மாணவரணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், திருப்பூர் மனோகர் பாபு ஆகியோரும் மற்றும் கழக இளம் பேச்சாளர்களும் பங்கேற்று சிறப்புரையாற்று கின்றனர்.

தமிழின் பெருமை போற்றும் இந்த கூட்டங்களில் தமிழ் அறிஞர்களும், இலக்கிய ஆர்வலர்களும், கழக நிர்வாகிகளும் ,கழக தோழர்களும் இளைஞர்களும் ,தாய்மார்களும் பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்று செம்மொழியாம் தமிழ் மொழியின் புகழை இன்னும் உயர்த்திடுவோம் என அழைப்பு விடுத்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு. கழகத்திற்கு எம்.ஜி.ஆர்.கழகம் ஆதரவு!

## பொதுச் செயலாளர் டி.ராமலிங்கம் அறிவிப்பு!

சென்னை, ஜன. 22-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழகத்திற்கு எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து இக்கட்சியின் பொதுச் செயலாளர் டி. இராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 37 வருடங்களாக மறைந்த எம்.ஜி.ஆர். கழக தலைவர் இராம வீரப்பன் அவர்கள் தமிழகத்தில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களைத் தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளார். அவரது வழியில் எம்.ஜி.ஆர். கழகத்தின் பொதுச் செயலாளர் டி. ராமலிங்கம் அவர்கள் வருகின்ற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ள சட்டமன்ற ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் சந்திரகுமார் அவர்கள் வெற்றி பெற முழு ஆதரவை தெரிவித்துள்ளார்.

மேலும் ஈரோடு, சேலம், நாமகல், திருப்பூர் ஆகிய எம்.ஜி.ஆர். கழக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு திராவிட முன்னேற்றக் கழக வெற்றிக்கு பாடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.ராமலிங்கம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.






நாகை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள், துறை துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் மற்றும் பலர் உள்ளனர்.



கோவை மாவட்டம், பரளிக்காடு மற்றும் பூச்சமரத்தூரில் சுற்றுச்சூழலியல் சுற்றுலா மூலம் நடைபெறும் மேம்பாட்டு பணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சர் சேலம் இராஜேந்திரன் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தி.மு.க. கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், அஷ்ரப் அலி, மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் சுரேந்திரன், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ராமுகுட்டி, மாவட்ட விவசாய அணி தலைவர் பத்திரசாமி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் நடராஜன், மாவட்டப் பிரதிநிதி மேடூர் கணேசன், குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி, கோவில் அறங்காவலர் குழு தலைவர் மோகனபிரியா, கூடலூர் நகராட்சித் தலைவர் அறிவரசு, மாவட்ட சுற்றுலா அலுவலர் ஜெகதீஸ்வரி, காரமடை வனச்சரகர் ரஞ்சித், செயல் அலுவலர் வனிதா தளபதி தியாகு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–2 க்கு உட்பட்ட திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்ட செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 20-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மெணசி கிராமத்தில் தமிழ்ப்புத்தாண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாநில அளவிலான கபடி போட்டியினை ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர். பி.பழனியப்பன் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தாமோதிரன், ஊராட்சி மன்றத் தலைவர் அன்பரசு, ஊர் பொதுமக்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் வந்துள்ள விளையாட்டு வீரர்கள், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியின் சார்பில் டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய மாவட்டக் கழக செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மேயர், துணை மேயர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகரக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.